# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 135/2014

பெயர் : தங்கவேல் நாள் : 28.09.2022

வா.த. சா.1 – 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.த.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனக்கும் பிரதிவாதிகளுக்கும் சர்வே எண் 95/5 ல்தான் பிரச்சனை. அதன் மொத்த விஸ்தீரணம் 18.5 ஏர்ஸ் ஆகும். சர்வே எண் 95/5 ல் உள்ள பூமியானது குமாரபாளையத்திலிருந்து எடப்பாடி செல்லும் தென்வடல் சாலைக்கு கிழக்கே உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 95/5 ஐ ஒட்டினாற்போல் வடபுறம் நவநீதன் வகையறா நிலம் மற்றும் வீடுகள் உள்ளது என்றால், சரிதான். நவநீதன் நிலத்திற்கு ஒட்டினாற்போல் வடபுறம் கிழமேலாக ஒரு வண்டித்தடம் செல்கிறது என்றால், சரிதான். அந்த வண்டித்தடத்தில் இருந்த கிழமேலாக சென்றால், இருபுறமும் விவசாய நிலங்கள் உள்ளன என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கு கிழபுறம் நிலங்கள் உள்ளன என்றால், சரியல்ல. வாதிகளுக்கு சொந்தமான வீடுகள் மட்டுந்தான் உள்ளது. கிழமேல் செல்லும் வண்டித்தடமானது எதுவரை செல்கிறது என்றால், அருந்ததியர் தெரு வரை செல்கிறது. கிழமேல் செல்லும் வண்டித்தடமானது அந்த தடம் செல்லும் வடக்கு, தெற்கு பகுதியில் உள்ள பூமிகளை உள்ளடக்கிதான் செல்கிறது என்றால், சரியல்ல. சர்வே எண் 94/22 ல் நிலத்தில் மட்டுந்தான் செல்கிறது. கிழமேல் செல்லும் வண்டித்தடமானது எவ்வளவு காலமாக உள்ளது என்றால், அது சுமார் 50 ஆண்டுகள் காலத்திற்கு மேலாக உள்ளது. சர்வே எண் 94 ல் உள்ள பூமியானது வடபுறம் மற்றும் தென்புறம் எங்களின் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். கிழமேல் உள்ள வண்டிதடத்திற்கு வடக்கே உள்ள பூமியும், தென்வடல் குமாரபாளையத்திலிருந்து எடப்பாடி செல்லும் ரோட்டிற்கும் கிழபுறத்தில் உள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் எடப்பாடி ரோட்டிற்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ல் கிரையம் பெறும் நபர்களான சின்னாகவுண்டர் மக்கள் மாரிகவுண்டர், கொழந்தாகவுண்டர், ஆறுமுககவுண்டர் ஆகியோர்கள் எனக்கு என்ன உறவுமுறை என்றால், கொழந்தாகவுண்டர் எனது தாத்தா ஆவார், மாரிகவுண்டர் மற்றும் ஆறுமுககவுண்டர் எனது தாத்தாவின் சகோதரர்கள்

ஆவார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாய்க்காலுக்கும் வடக்கும், செல்லப்பகவுண்டர் வகையறா வேடிக்தாருக்கு தெற்கு, ஆயத்தாருக்கு மேற்கு இதன் மத்தியில் வேடித்தாரு புஞ்சை ஏக்கர் 2.75 என்று சொல்லபட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள செக்குபந்திக்கு தற்போதைய நிலையை சக்குபந்திகளை நிருபணம் செய்வதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். கிழமேல் வண்டித்தடம் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திய காலத்திலேயே இருந்ததா என்றால், இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது இன சொத்தானது கிழமேல் செல்லும் வண்டித்தடத்திற்கு வடக்கில் உள்ள சொத்து என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூன்று ஏக்கர் சொத்திற்கான செக்குபந்தி விபரத்தில் செல்லப்பகவுண்டர் ஆயக்காரருக்கு வடக்கு என்று குறிப்பிட்டுள்ளதால், நான் வழக்கு சொத்திற்கு எந்தவிதமான உரிமையாளரும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவைகள் அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ஆவணப்படி பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவொரு பரிகாரமும் நீதிமன்றத்தில் கோரமுடியாது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதிகளையும் அவர்களின் சுவாதீனத்தையும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/5 உள்ள சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் அளித்த புகாரின் அடிப்படையில் நில அபகரிப்புக்காக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தற்போது சேலம் நில அபகரிப்பு பிரிவில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், சரிதான். நான் என்மீது நில அபகரிப்பு சம்பந்தமாக போடப்பட்ட முதல் தகவல் அறிக்கையை Quash செய்ய வேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று நான் ஒத்துக்கொண்டால் அது இந்த வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால், நான் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சர்வே எண் 95/5 பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய நான் மனு தாக்கல் செய்து அந்த மனுவின்மீதான மேல் விசாரணை தற்போது சேலம் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், நிலுவையில் இல்லை, அந்த விசாரணை முடித்து எங்கள்மீது பட்டாவில் பெயர்

மாற்றம் செய்து கொடுத்து விட்டார்கள். அந்த விசாரணை முடிவு அறிக்கைதான் எனது தரப்பில் வா.சா.ஆ.46 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.46 ல் சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி தனது உத்தரவில் சங்ககிரி கோட்டாட்சியர் மீள விசாரித்து மறு ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.த.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.